# 9 கரிகாலன் கட்டிய கல்லணை

மணிமொழியும் கனிமொழியும் தங்களது முதல் பருவ விடுமுறையில், திருச்சியிலுள்ள தம் மாமா வீட்டிற்குச் சென்றனர். கல்லணையைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தினை மாமாவிடம் கூறினர். மாமாவும் அதற்கு இசைந்து தம் குடும்ப உறுப்பினர்களையும் அழைத்துக் கொண்டு கல்லணைக்குச் செல்கிறார்.

**மணிமொழி** : எனக்கு இந்தப் பயணம் மகிழ்ச்சியைத் தருகிறது மாமா.

**கனிமொழி** : எனக்கும் தான். ஏனென்றால் நம்மோடு அத்தையும் கபிலனும் வருவது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

**அத்தை** : நாம் பார்க்கப் போகும் கல்லணையை நெருங்கிவிட்டோம்.

**மாமா** : வாருங்கள்! கல்லணையைச் சுற்றிப் பார்ப்போம்.

**கனிமொழி** : மாமா, கல்லணை எந்த மாவட்டத்தில் உள்ளது?

**மாமா** : தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. திருச்சியிலிருந்து 20 கிமீ தொலைவில் உள்ளது. இந்தக் கல்லணையைக் கரிகாலன் என்ற மன்னன் கட்டினான்.



மணிமொழி : கல்லணை கட்டிய கரிகாலனைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வமாக உள்ளேன் மாமா, உங்களுக்குத் தெரிந்த செய்திகளைக் கூறுங்கள்.

அத்தை : எனக்குத் தெரியும். நான் கூறுகிறேன் கேளுங்கள். சோழ அரசர்களில் சிறப்புமிக்க அரசன் கரிகாலன் ஆவார். இவரது இயற்பெயர் வளவன் என்பதாகும்.

கனிமொழி : இவரது பெயர் வளவன் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் கரிகாலன் என்ற பெயர் எப்படி வந்தது?

மாமா : கரிகாலன் என்பதற்குக் கருகிய காலை உடையவன் என்பது பொருள். இளம் வயதில் இவருக்கு ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக இப்பெயர் இவருக்கு வழங்கலாயிற்று.

மணிமொழி : ஐ! கல்லணை எவ்வளவு நீளமாகவும், பார்ப்பதற்கு எவ்வளவு அழகாகவும் இருக்கிறது. இந்தக் கல்லணையைக் கட்ட கரிகாலன் எடுத்துக் கொண்ட முயற்சியைக் கூறுங்கள் மாமா.

W9K8ZU



**மாமா** : சரி கூறுகிறேன். எனது ஆசிரியர் எனக்குச் சொன்ன செய்திகளை நான் உங்களுக்குக் கூறுகிறேன். தற்போது பயன்பாட்டில் உள்ள மிகப் பழைமையான ஒரே அணை கல்லணை. இதுவே உலகின் மிகப் பழைமையான நீர்ப்பாசனத்திட்டம் எனவும் கூறப்படுகிறது. மணலில் அடித்தளம் அமைத்துக் கட்டியுள்ளார்கள். இது பழந்தமிழரின் கட்டுமானத் திறனுக்குச் சான்றாகும். இது இன்று வரை வியத்தகு சாதனையாக உள்ளது.



**மணிமொழி** : ஓ! அப்படியா மாமா..........

**மாமா** : ஆம், காவிரியில் அடிக்கடி பெருவெள்ளம் வரும், ஆனால் அந்த நீர் எதற்கும் பயன்படாமல் கடலுக்குச் சென்றுவிடும். மழைக்காலத்தில் வெள்ளப் பெருக்காலும், கோடைக்காலத்தில் நீர் இன்றியும் மக்கள் துயரப்பட்டதைக் கண்டு அதனைத் தடுக்கும் பொருட்டு பெரியதோர் அணையைக் கட்ட முடிவெடுத்தான் கரிகாலன்.

**மணிமொழி** : அப்போதே இரும்புக் கம்பிகள், பைஞ்சுதை (சிமெண்ட்) இருந்தனவா?

**மாமா** : இல்லையம்மா, அணை கட்டப்பட்ட முறையைச் சொல்கிறேன் கேள். காவிரி ஆற்றின்மீது பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன. அந்தப் பாறையின் மேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத ஒரு வித ஒட்டும் களிமண்ணைப் பூசி, இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளும்படி செய்தனர். இது பல நூற்றாண்டுகள் கடந்தும், இன்றளவும் உறுதியோடு நிற்கிறது. கல்லணை தமிழர்களின் கட்டுமானத் திறனைப் பறை சாற்றுவதாக உள்ளது.

**கபிலன்** : இதோ, இங்கே பாருங்கள். ஒரு கல்வெட்டு உள்ளது. இதில் என்ன எழுதியிருக்கிறது என்று படிப்போம் வாருங்கள்.

**மாமா** : இவ்வணை இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. காவிரி ஆறானது காவிரி, கொள்ளிடம், வெண்ணாறு, புதுஆறு என நான்காகப் பிரிகிறது. காவிரியாறு பிரியும் இடத்தில்தான் கல்லணை கட்டப்பட்டுள்ளது. இதனால்தான் திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்கள் வளமாகின்றன. இது உழவுப் பாசனத்திற்கான மிகப்பெரிய திட்டமாகும்.

**அத்தை** : மதிய உணவு கொண்டு வந்துள்ளேன், மரநிழலில் அமர்ந்து அனைவரும் உணவு உண்போம் வாருங்கள்!

**கனிமொழி** : கல்லணை, பார்ப்பதற்குக் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. எனவே கரிகாலனுக்கு நன்றி கூறுவோம்.

**மணிமொழி** : கல்லணை உள்ளவரை கரிகாலனின் புகழ் நிலைத்துநிற்கும்.

## வாங்க பேசலாம்



- கல்லணை பற்றி உனக்குத் தெரிந்த செய்திகளை உன் சொந்த நடையில் கூறு.
- உமது ஊரில் உள்ள மிகப் பழைமையான இடம் எது? அதுபற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.



### சிந்திக்கலாமா?

கோடைக்காலங்களில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படக் காரணம் என்ன?

நீர்ப்பற்றாக்குறையைப் போக்க என்ன செய்வாய்?

பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்டல் / வினாக்கள் எழுப்புதல், அவற்றின் மீதான தங்கள் கருத்துகளை / எதிர் வினைகளை வெளிப்படுத்துதல்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான பழத்தைத் தேர்ந்தெடுக்க

01 துயரம் இச்சொல் குறிக்கும் பொருள் ..........................................

02 வியத்தகு இச்சொல் குறிக்கும் பொருள் ..........................................

03 முறியடித்து இச்சொல் குறிக்கும் பொருள் ..........................................

04 சூழ்ச்சி இச்சொல் குறிக்கும் பொருள் ..........................................



## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 **பெருவெள்ளம்** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

அ) பெருமை + வெள்ளம் ஆ) பெரு + வெள்ளம்

இ) பெரு + வுள்ளம் ஈ) பெரிய + வெள்ளம்

02 **தங்கியிருந்த** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

அ) தங்கி + இருந்த ஆ) தங்கி + யிருந்த

இ) தங்கியி + ருந்த ஈ) தங்கு + இருந்த

03 **அமைந்துள்ளது** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

அ) அமைந் + துள்ளது ஆ) அமைந்து + உள்ளது

இ) அமைந்து + ள்ளது ஈ) அமைந் + உள்ளது

04 **அரசு + ஆட்சி** என்பதைச் சேர்த்து கிடைக்கும் சொல் ..........................................

அ) அரசஆட்சி ஆ) அரசாட்சி


இ) அரசுசாட்சி ஈ) அரசுஆட்சி

05 **நீர் + பாசனம்** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........................................

அ) நீர்பாசனம் ஆ) நீர்ப்பாசனம்

இ) நீரப்பசனம் ஈ) நீரபாசனம்

## பந்தை அதன் எதிர்ச்சொல் கூடையில் போடலாமா?



## சரியானதை எடுத்து எழுதுக

01 கல்லணை அமைந்துள்ள மாவட்டம் .................................... (திருச்சி/ தஞ்சாவூர் )

02 தமிழ்நாட்டில் காவிரியின் முக்கிய துணையாறு ..................................... (வைகை / கொள்ளிடம்)

03 கல்லணையைக் கட்டிய அரசன் .............................. (கரிகாலன் / இராசராசன்)

04 கல்லணை ...................................... தொழில்நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது (பழந்தமிழர் / இன்றைய)

## வினாவிற்கு ஏற்ற விடையளிக்க.

01 கரிகாலனின் இயற்பெயர் என்ன?

02 கரிகாலன் என்று பெயர் வரக் காரணம் என்ன?

03 கரிகாலன் கல்லணையைக் கட்ட காரணம் யாது ?

04 கல்லணையின் சிறப்பாக நீ நினைப்பதை எழுதுக.

# மொழியோடு விளையாடு

## ஓர் எழுத்தைக் கண்டுபிடி, நான்கு சொல்லைப் பெறலாம்




| | | |
|---|---|---|
| | ச ம ம் | |
| ம ரம் | ம | ம ணம் |
| | ம ருந்து | |

| | | |
|---|---|---|
| | நீ __ ம் | |
| வ __ ம் | | கா__ ம் |
| | வி __ க்கு | |

| | | |
|---|---|---|
| | __ ளம் | |
| பழ __ | | தொ __ தி |
| | __ டம் | |

| | | |
|---|---|---|
| | மா __ லை | |
| __ குதி | | __ றகு |
| | கரு __ | |

## அறிந்து கொள்வோம்



**தமிழ்நாட்டிலுள்ள முக்கிய அணைகள்**

- கல்லணை
- மேட்டூர் அணை
- வைகை அணை
- சாத்தனூர் அணை
- பவானி சாகர் அணை





## செயல் திட்டம்

நூலகத்திற்குச் சென்று வரலாற்று நூல்களைப் படித்து யாரேனும் ஐந்து அரசர்களின் பெயர்களையும், அவர்கள் செய்த நற்செயல்களையும் தெரிந்து கொண்டு அட்டவணையை நிரப்பி வருக

| வ. எண் | பெயர் | சிறப்பு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

# அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அண்டை நாடு | – | பக்கத்து நாடு |
| 2. | அண்ணல் | – | கருணை உடையவர் |
| 3. | ஆசி | – | வாழ்த்து |
| 4. | ஆட்டாந்தொழு | – | ஆடு கட்டும் இடம் |
| 5. | ஆல் | – | ஆலமரம் |
| 6. | ஆவி | – | உயிர் |
| 7. | ஆயத்தப்படுத்துதல் | – | தயார் செய்தல் |
| 8. | இலகுவான | – | எளிமையான |
| 9. | எண்ணும் | – | நினைக்கும் |
| 10. | என்னில் | – | எனக்குள் |
| 11. | ஓலைக்கொட்டான் | – | ஓலையால் முடையப்பட்ட சிறு கூடை |
| 12. | கனிந்து | – | பழுத்து |
| 13. | முறியடித்து | – | தகர்த்து |
| 14. | கொடியடுப்பு | – | பக்க அடுப்பு |
| 15. | சூழ்ச்சி | – | தந்திரம் |
| 16. | சேதாரம் | – | வீணாதல் |
| 17. | துயரம் | – | துன்பம் |
| 18. | துளிர் | – | இளம் இலை |
| 19. | தையலர் | – | பெண்கள் |
| 20. | தொலைவு | – | தூரம் |
| 21. | மன்னர் | – | அரசர் |
| 22. | மாட்டாந்தொழு | – | மாடுகட்டும் இடம் |
| 23. | முளைப்பாரி | – | நவதானியங்கள் முளைத்துச் சிறிது வளர்ந்து நிறைந்துள்ள மண்பாண்டம் |
| 24. | பொதி | – | மூட்டை |
| 25. | வல்லமை | – | வலிமை |
| 26. | வியப்பு | – | ஆச்சரியம் |
| 27. | விரைவில் | – | வேகமாக |
| 28. | வெட்டவெளி | – | திறந்த வெளி |
| 29. | வேளை | – | நேரம் |

# கற்றல் விளைவுகள்

| கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|
| • ஓசைநயமிக்க பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர்.<br>• புதிர்க்கதைகளைக் கேட்டுப் புரிந்துகொள்வர்.<br>• பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்பர்.<br>• வினாக்கள் எழுப்புவர். அவற்றின் மீதான தங்கள் கருத்துகளை/ எதிர்வினைகளை வெளிப்படுத்துவர். | • தெளிவாகப் பொருள் விளங்க ஒப்பிப்பர்.<br>• தங்குதடையின்றி இயல்பாகப் பேசுவர்.<br>• தேசிய மாநில அளவிலான சமூக, உணர்வு பூர்வமான செய்திகளை இனங்கண்டு அவற்றின்மீது கருத்தாடல் செய்வர்.<br>• கதைகள், பாடல்களைத் தங்கள் சொந்த நடையில் தாம் விரும்பும் வகையில் தம் கருத்துகளையும் இணைத்துச் சொல்வர்.<br>• எளிய வருணனைச் சொற்களைக் கலந்து பேசுவர். | • படிக்கும் பகுதியில் இடம்பெறும் பழமொழிகள், மரபுச்சொற்கள் அறிவர்.<br>• சிறு சிறு கதைகள், பாடல்களை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கப் படிப்பர்.<br>• உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• நிறுத்தக் குறிகளுக்கு ஏற்ப, நிறுத்திப் படிப்பர்.<br>• படித்து உணர்ந்த வற்றோடு தங்கள் அனுபவங்களையும் தொடர்புபடுத்துவர்.<br>• உரைப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பர். | • எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறு சிறு உரைப் பகுதிகளைத் தமக்கான நடையில் எழுதுவர்.<br>• நிறுத்தக் குறிகளின் பயன்பாட்டை அறிந்து, பொருத்தமாகப் பயன்படுத்துவர்.<br>• புதிய பொருண்மை களை உணர்ந்து, தம் சொற்களில் (பேச்சிலும் எழுத்திலும்) பயன்படுத்த அறிவர்.<br>• கற்பனையாகக் கதை எழுதுவர்.<br>• தம் தேவைகளைப் பெறுவதற்காகக் கடிதம் எழுதுவர். |

| நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல் | கற்கக் கற்கும் திறன்கள் ( தானே கற்றல்) | சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும் |
|---|---|---|
| • ஐம்பால் வகையறிவர். (ஆண், பெண், பலர், ஒன்றன், பலவின் பால்கள்)<br>• உரிய இணைப்புச்சொற்களைப் பொருத்தமான இடங்களில் சேர்த்து எழுதுவர். (ஆனால், அதனால், ஏனெனில், அப்படியானால்… …)<br>• ஒருமை, பன்மை வேறுபாடு அறிந்து எழுதுவர்.<br>• மயங்கொலி எழுத்துகள் அமைந்த சொற்களின் பொருளறிந்து பொருத்தமாகப் பயன்படுத்துவர். | • கதைநூல்களைப் படிப்பர்.<br>• குழந்தைகளுக்கான எளிய அகரமுதலிகளைப் பயன்படுத்த அறிவர்.<br>• தகவல்கள், சொற்பொருள்களைத் தேடி அறிந்துகொள்வர்.. | • சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படிப்பர்.<br>• சிறுவர்களுக்கான கதைகள், பாடல்களைப் படிப்பர்.<br>• பழமொழிகளின் பொருளறிந்து, பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.<br>• ஒரு சொல்லிலிருந்து பல சொற்களை உருவாக்க அறிவர். |
| **படைப்புத் திறன்கள்** | **விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல்** | **வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுதல்** |
| கலையும் கைவண்ணமும் ( வரைதல், வண்ணம் தீட்டுதல், கைவினைப் பொருள்கள் செய்து பார்த்தல்) | • பிறர்க்கு உதவுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• நன்றியுணர்வு<br>• தன்னம்பிக்கை | • கூர்சிந்தனைத் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனை |

## தமிழ் – நான்காம் வகுப்பு
## தமிழ் ஆக்கம்

### கல்வி ஆலோசகர்

**முனைவர். பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

### மேலாய்வாளர்கள்

**ஆ.சே.பத்மாவதி**,எழுத்தாளர்,
சென்னை.

**முனைவர். அ. மணமலர்ச்செல்வி,**
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர் மாவட்டம்.

**ந. இராமலிங்கம்**, உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**பா. மலர்விழி**, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர்.

**சி. பன்னீர்செல்வம்**, கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை.

**இல. சீனிவாசன்**, முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலூம் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

### ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர். கா.சா. மொழியரசி,** முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

**தே.விமலா தேவி,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை

### கலை மற்றும் வடிவமைப்புக்குழு

#### பக்க வடிவமைப்பு

**உதய் இன்போடெக்**
குரோம்பேட்டை, சென்னை

சந்தோஷ்குமார் சக்திவேல்
திருவாரூர்.

#### வரைபடம்

**ரா.ஷாலினி**
**வை.மை.பிராங்க் டஃப்**
**பா. ரவிகுமார், ஈரோடு.**
**செ. ரமேஷ்,**

### பாடநூல் உருவாக்கக் குழு

**முனைவர். பு. வழியரசன்,**
ஊ. ஒ. தொ. பள்ளி,
இடைச்செருவாய், கடலூர் மாவட்டம்.

**அ. மேரிவேளாங்கண்ணி,** தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, திம்மனந்தல்,
விழுப்புரம் மாவட்டம்.

**பெ. முருகராணி**, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர்,
பெரம்பலூர் மாவட்டம்.

**அர. அனுசுயா தேவி,** இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையம்பாளையம்,
விழுப்புரம் மாவட்டம்.

**சு. அமுதா,**
ஊ. ஒ. தொ. பள்ளி, கீழையூர்,
திருமானூர், அரியலூர் மாவட்டம்.

**க. மல்லிகா**, தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர்,
திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

**செ. சாந்தி ஜுலி**, தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. ந. நி. பள்ளி.விளாகம், திருமானூர்
அரியலூர் மாவட்டம்.

**சீ. மைதிலி**, பட்டதாரி ஆசிரியை,
அ.ஆ.மே.நி.பள்ளி. குன்னம், பெரம்பலூர்.

**இரா. சித்ரா**, இடைநிலை ஆசிரியை,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, அஸ்தினாபுரம், அரியலூர்

**த. சம்பத்குமார்**, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, அகரம்(கா), பரங்கிப்பேட்டை

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

**சூ.ஆல்பர்ட் வளவன் பாபு** ,பட்டதாரிஆசிரியர்
அரசினர் உயர் நிலைப்பள்ளி, பெருமாள் கோவில்,
பரமக்குடி, இராமநாதபுரம்

**ம.முருகேசன்**, பட்டதாரி ஆசிரியர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பெத்த வேளாண் கோட்டகம்,
முத்துப்பேட்டை, திருவாரூர்.

**வ.பத்மாவதி**, பட்டதாரி ஆசிரியர்,
அரசினர் உயர் நிலைப்பள்ளி, வெற்றியூர்,
திருமானூர், அரியலூர்.

### தரக்கட்டுப்பாடு

**ராஜேஷ் தங்கப்பன்**
**காமாட்சிபாலன் ஆறுமுகம்**
**பிரசாந்த் பெருமாள்சாமி**
**ப. அருண் காமராஜ்**

### வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்

**ரமேஷ் முனிசாமி**